2014 ஆகஸ்ட் 7]

பிளாக்கில் இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வருகின்ற கூத்தநாச்சி ஓடை நீரை கேசவபுரம் கண்மாய்க்குக் கொண்டு வந்து நிரப்பினால், சுற்றியிருக்கின்ற 10 கிராமங்கள் பயன்பெறும். அந்தக் கண்மாய் 15 வருடங்களாகத் தூர் வாரப்படாமல் இருக்கிறது. அந்த வாய்க்காலைத் தூர் வாரி, கண்மாயையும் தூர் வாரி, அந்த ஓடையில் இரண்டு Check Dams அமைத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு அதிக பலனைக் கொடுக்கும் என்பதைக் கூறி, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் மூன்று தினங்களுக்கு முன்னால் இதே கோரிக்கையை என்னிடம் தெரிவித்தார்கள். இந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 361, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

361—

துணை மின் நிலையம்

***32674—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, வேந்தன்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

திருமயம் தொகுதி, வேந்தன்பட்டி பகுதிக்கு கொன்னையூர் 110/11 கிலோ வோல்ட், 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன் உள்ள துணை மின் நிலையத்திலிருந்து பொன்னமராவதிக்கு 11 கிலோ வோல்ட் மின்னூட்டி வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மின்னூட்டியின் உச்ச மின் பளு 9.9 எம்.வி.ஏ. ஆகும். பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் மூன்று மாதங்களில் முடிவடையும். மேலும், பொன்னமராவதியில் உள்ள 11 கிலோ வோல்ட் மின்னூட்டியின் வழியாக பொன்னமராவதிக்கு 4.6 எம்.வி.ஏ. மின் பளுவும், வேந்தன்பட்டிக்கு 3.6 எம்.வி.ஏ. மின் பளுவும் ஆக மொத்தம் 8.2 எம்.வி.ஏ. மின் பளுவுடன் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வேந்தன்பட்டியில் அதிகரித்துவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு, பொன்னமராவதியில் உள்ள 11 கிலோ வோல்ட் மின்னூட்டியை இரண்டாகப் பிரித்து, வேந்தன்பட்டிக்கு தனி மின்னூட்டியும், பொன்னமராவதிக்கு தனி மின்னூட்டியும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் இரண்டு மாத காலத்திற்குள் முடிவடையும். பணிகள் நிறைவு பெற்றவுடன், இந்தப் பகுதியில் சீரான மின்சாரம் வழங்கப்படும். எனவே, திருமயம் தொகுதி, வேந்தன்பட்டியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழ் மொழி காத்து, அகிலத்தில் தமிழகத்தின் நலன் காத்து, உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவியாய் உயர்ந்திருக்கும் எங்கள் அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன். திருமயம் தொகுதி, கொன்னையூரில் 110/11 கிலோ வோல்ட் 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையம் உள்ளது.*

2014 ஆகஸ்ட் 7]

அதில் 16 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றிகள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. கொன்னையூர் துணை மின் நிலையம் அமைந்துள்ள பகுதியில் 40 ஊராட்சிகளும், வளர்ந்து வரும் பொன்னமராவதி பேரூராட்சியும் உள்ளன; மக்கள்தொகையும் அதிகமாக உள்ளது. விவசாய நிலங்களும், மின் மோட்டார்களும் அதிகமாக உள்ளன. எனவே, 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேந்தன்பட்டி பகுதிக்கு மின்சாரம் செல்லும்போது குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் படித்துக்கொண்டே இருக்கிறீர்கள், கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *வேந்தன்பட்டியைச் சுற்றி திருக்கொளம்பூர், வார்பட்டு மற்றும் உள்ள 10 ஊர்களிலும் மின் மோட்டார்கள் அதிகமாக உள்ளன. வேந்தன்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியது மிக அவசியமாகும். எனவே, எதிர்காலத்தில் அங்கு புதிய துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் திருமயம் தொகுதி, கொன்னையூரில் ஏற்கெனவே 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் இருக்கின்றது. அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து, பொன்னமராவதி மின்னூட்டி வழியாக, வேந்தன்பட்டிக்கு இப்போது மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வேந்தன்பட்டி பகுதியிலே, மின் பளு அதிகரித்திருக்கின்றது. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதற்காகத்தான், தற்போது வேந்தன்பட்டிக்கு ஒரு மின்னூட்டியும், பொன்னமராவதிக்கு ஒரு மின்னூட்டியும் என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. அவ்வாறு இரண்டாகப் பிரிக்கப்படும் அந்தப் புதிய மின்னூட்டிகளுக்காக மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்குப் புதிய வழித்தடமும், வேந்தன்பட்டிக்கு கொன்னையூரிலிருந்து புதிய

வழித்தடம் அமைத்தும், அதன் மூலமாக அதிலிருந்து மின்சாரம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தப் பணிகள் இரண்டு மாத காலத்திற்குள் முடிவடையும். இது ஒரு பக்கம் நடைபெறுகிறது.

மற்றொன்று; அந்த மின் பளுவின் தேவையைக் கருத்தில்கொண்டு, புதியதாக 10 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியை-Power Transformer—அங்கு கூடுதலாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இரண்டு மாத காலத்திற்குள் அந்த 10 எம்.வி.ஏ. கூடுதல் திறன்கொண்ட மின்மாற்றியும் கொன்னையூரில் அமைக்கப்படவிருக்கிறது. ஆகவே, புதிதாக அமைக்கப்படவிருக்கின்ற இந்த 10 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியிலிருந்து புதிதாக அமைக்கப்படவிருக்கின்ற மின்னூட்டி வழியாக வேந்தன்பட்டிக்கு மின்சாரம் வழங்குகின்றபோது, எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் குறைந்த மின் அழுத்தப் பிரச்சினையும் மின் தட்டுப்பாடும் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பொதுப்படையாகவே ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓர் இடத்தில் மின் பளு மின் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னால், அந்த இடத்தில் புதியதாக ஒரு துணை மின் நிலையத்தைப் பக்கத்தில் அமைத்துத்தான் மின் பளுவை சரி செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லை. இடவசதி இருந்தால், இருக்கின்ற துணை மின் நிலையங்களையே தரம் உயர்த்துவதன்மூலம் அந்தப் பகுதியில் தேவையான மின் பளுவை வழங்கமுடியும். ஆகவேதான், புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குப் பதிலாக, வாய்ப்பிருந்தால், அந்தப் பகுதியில் இருக்கின்ற துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தினால், குறைந்த மின் அழுத்தப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவரலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதிக்குக் கூடுதல் மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து வசதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்திருக்கிறது என்ற காரணத்தினால், வருங்காலத்திலே அப்படிப்பட்ட பிரச்சினை எழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை வருங்காலத்தில் இதற்கு மேலும் கூடுதல் மின் பளு ஏற்பட்டால் அதையும் ஆய்வு செய்து, தேவை ஏற்படின் நிதிநிலைக்கேற்ப, அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான

2014 ஆகஸ்ட் 7]

நடவடிக்கைகளை எடுப்பது குறித்து மாண்புமிகுஅம்மா அவர்களின் அரசு ஆலோசிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொன்னையூர் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து வேந்தன்பட்டிக்குத் தனியாக ஒரு லைன் அமைத்து, அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறை போக்கப்படும் என்ற நல்ல தகவலை அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கின்ற, வெள்ளைக்கரை ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணியை விரைவாகத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி தொகுதி, வெள்ளைக்கரை பகுதிக்கு புதிதாகத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தகவலை சரிபார்த்து, நிலம் கையகப்படுத்தப்பட்டிருந்தால், அந்தப் பகுதியிலே புதிதாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய விரைவான

நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.

முற்பகல் 10-20

திரு. து. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில் உள்ள ஊரப்பாக்கம் ஊராட்சி என்பது வளர்ந்து வரும் ஒரு ஊராட்சியாகும். அந்த ஊராட்சியில் 25,000-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அங்கு குறைந்த மின் அழுத்தம் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிப்படைகின்றனர். ஊரப்பாக்கம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு போதுமான இடம் இருக்கின்றது. எனவே, ஊரப்பாக்கம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியினுடைய மின் தேவை எவ்வளவு என்பது ஆய்வு செய்யப்படும். அவ்வாறு ஆய்வு செய்த பிறகு, தேவை ஏற்படின் அங்கு புதிதாக ஒரு துணை மின் நிலையம் அமைத்தோ அல்லது இருக்கின்ற துணை மின் நிலையத்தினைத் தரம் உயர்த்தியோ அந்தப் பகுதியில் உள்ள மின் பற்றாக்குறையைச் சரி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் சிந்திக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதிக்குட்பட்ட மேலவளவு, வேப்படம்பு பகுதிகளில் இரண்டு துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக

2014 ஆகஸ்ட் 7]

மின்சார வாரியம் மூலமாக இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிய வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவளவு பகுதியில் துணை மின் நிலையம் ஒன்றும், திருவாதவூர் பகுதியில், வேப்படம்பு என்ற இடத்தில் ஒரு துணை மின் நிலையமும் இந்த ஆண்டு அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, மேலவளவிலும் மற்றும் திருவாதவூரில் உள்ள வேப்படம்பு பகுதியிலும் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டு தயாராக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்று, சோழவந்தானில் இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு ரூ.36 கோடி, அலங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகம் புதியதாகக் கட்ட ரூ.50 இலட்சம், வைகை அணை துணைக் கால்வாயைப் புனரமைக்க ரூ.25 கோடி, அலங்காநல்லூர் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கு ரூ.90 இலட்சம் ஒதுக்கீடு செய்தும், சர்க்கரை ஆலையில் பணிபுரிந்த 61 தொழிலாளர்களை நிரந்தரப் பணியாளர்களாகப் பணி நியமனம் செய்தும் ஆகிய இவ்வளவையும் கிள்ளிக் கொடுத்தால் போதாது என அள்ளிக் கொடுத்த, இந்தியத் திருநாட்டில் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட ஆண்டிப்பட்டி ஊராட்சியில் 2 ஏக்கர் 40 சென்ட் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அலங்காநல்லூர் மற்றும் வாடிப்பட்டி ஒன்றியங்கள் சேருகின்ற இடத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சோழவந்தான் பகுதியில், இப்போது இருக்கின்ற மின் தேவையைக் கருத்தில்கொண்டும், வருங்காலத்தில் அதிகரிக்கக்கூடிய மின் தேவையைக் கருத்தில்கொண்டும், தேவை ஏற்படின், நிதிநிலைமைக்கேற்ப அந்தப் பகுதியிலே இருக்கின்ற துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தவோ அல்லது புதிதாக துணை மின் நிலையம் அமைப்பதற்கோ வேண்டிய ஆய்வுகளைச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியில் 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரது தொகுதி கள்ளக்குறிச்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு கருத்துரு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதற்கான பணிகள் விரைவுபடுத்தப்படுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அந்தப் பகுதி ஏற்கெனவே துணை மின் நிலையம் அமைப்பதற்கு 12-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் தேர்வு செய்யப்பட்டிருந்தால், அந்தப் பணியை விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 362, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

362—

பாலத்தை அகலப்படுத்துதல்

***20721—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, யா. ஒத்தக்கடை பகுதியில் நெடுஞ்சாலையிலுள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மதுரை கிழக்கு தொகுதி, யா. ஒத்தக்கடை நெடுஞ்சாலையிலுள்ள குறுகிய பாலத்தை இவ்வாண்டின் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்மூலம் அகலப்படுத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.